இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 09.01.2026

# ‘பியூஷ்’ போன வாதங்கள்!

“திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தி.மு.க. கூட்டணி இந்துக்களுக்கு எதிரானது என்பது தெளிவாகிறது” என்று ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் சொல்லி இருக்கிறார்.

**“திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றலாம்” என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக்கிளையின் இரு அமர்வு தீர்ப்பளித்து உள்ளது. இதனை வைத்துத்தான் பியூஸ் கோயல் இப்படி பேட்டி தந்துள்ளார். தமிழக பக்தர்களுக்கு நீதி கிடைத்துள்ளதாகவும், தமிழ்நாட்டில் சனாதன தர்மத்தை இழித்தும் பழித்தும் பேசி வருவதாகவும், தனி நீதிபதி உத்தரவை தமிழ்நாடு அரசு செயல்படுத்தவில்லை என்றும், அந்த உத்தரவுக்கு எதிராக அரசு மேல்முறையீடு செய்தது துரதிஷ்டவசமானது என்றும், இது இந்து தர்மத்துக்கு விரோதமானது என்றும், அவர்களது இந்து விரோத மனப்பான்மையை பிரதிபலித்தது என்றும், இப்போது இரண்டு நீதிபதிகள் நீதியை நிலைநாட்டி விட்டதாகவும் பியூஷ் கோயல் சொல்லி இருக்கிறார்.**

இவை அனைத்தும் பியூஷ் போன வாதங்கள் ஆகும். அவருக்கு திருப்பரங்குன்றம் எந்தத் திசையில் இருக்கிறது என்றோ, அங்கு நடந்தது என்ன விவகாரம் என்றோ தெரியாது.

‘திருப்பரங்குன்றம் மலை தூணில் தீபம் ஏற்ற வேண்டும்’ என்பது தனி நீதிபதியின் தீர்ப்பு. அதனை இரண்டு நீதிபதிகள் அமர்வு உறுதி செய்துள்ளது.

திருப்பரங்குன்றத்தில் காலம் காலமாக எங்கே தீபம் ஏற்றப்படுமோ அங்கு தீபம் ஏற்றப்பட்டு விட்டது என்பதை மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் அறிவாரா?

கார்த்திகை தீபம் அன்று திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் கோவிலில் காலம் காலமாக தீபம் ஏற்றும் இடத்தில் தீபம் ஏற்றப்பட்டது. 3.12.2025 புதன்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வழக்கப்படி திருக்கோவிலுக்குள் பால தீபம் ஏற்றப்பட்டது.

அதன்பிறகு அதே நேரத்தில் வழக்கமாக ஏற்றக் கூடிய உச்சிப்பிள்ளையார் கோவிலில் தீப மண்டபத்தில் தீபம் ஏற்றப்பட்டு, பின்பு சுவாமி புறப்பாடு ஆகி, பதினாறு கால் மண்டபம் எதிரே உள்ள இடத்தில் சொக்கப்பனை ஏற்றி சுவாமிக்கு ரஷை சாத்தப்பட்டது. இவை முறையாக நடந்தது. இது பக்தர்கள் அனைவருக்கும் தெரியும்.

**ஆனால், வழக்கமான இடத்தை மாற்றி, வேறொரு இடத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என்று ஒரு கும்பல், உள்நோக்கத்தோடு பல காலமாகச் செயல்பட்டு வந்தார்கள். மலைப்பகுதியில் இருக்கும் தர்காவுக்கு அருகில் இருக்கும் தூணில் தீபம் ஏற்றுவதன் மூலமாக இரு மதப்பிரிவினர் இடையே மோதலை உண்டாக்கி, அதன் மூலமாக குழப்பத்தை ஏற்படுத்தப் பார்த்தார்கள். இதனை தமிழ்நாடு அரசு அனுமதிக்க வில்லை. இதுதான் பிரச்சினை.**

அதாவது பிரச்சினையை உருவாக்கி, அதன் மூலமாக மோதலை உருவாக்கி, அந்த மோதலை தமிழ்நாடு முழுக்கப் பரப்பி, தமிழ்நாட்டின் அமைதியைக் கெடுக்க ஒரு கும்பல் முயற்சித்தது. இதனை தமிழ் அரசு அனுமதிக்கவில்லை. அத்தகைய கலவரத்தை நிகழ்த்த முடியாத வேதனையைத் தான் பாசிச சக்திகள் இன்று வெளிப்படுத்தி வருகிறார்கள்.

**‘தீபத் தூணில் தீபம் ஏற்ற அனுமதி மறுக்கப்படுகிறது’ என்ற வதந்தியை பல காலமாக பரப்பி வருகிறார்கள். உண்மையில் இவர்கள் சொல்வது தீபத் தூண் அல்ல. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நில அளவைக்காக வைத்த தூணைத்தான் ‘தீபத் தூண்’ என்கிறார்கள்.**

மலையில் இருக்கும் சிக்கந்தர் தர்க்காவுக்கும் முருகர் கோவிலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த தர்க்காவுக்கு அருகில் தான் பிரிட்டிஷ் ஆட்சி காலத்து நில அளவைத் தூண் இருக்கிறது. தர்க்காவுக்கு அருகில் இருக்கும் தூணில் தீபம் ஏற்ற வேண்டும், அதனால் குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அவர்களது எண்ணம்.

**பிள்ளையார் கோவிலில் கார்த்திகை தீபம் கடந்த 3 ஆம் தேதியன்று ஏற்றப்பட்டு விட்டது. ‘அரசு தீபம் ஏற்ற அனுமதிக்கவில்லை’ என்பது மிகப்பெரிய பொய்யாகும். தீபம் ஏற்றப்பட்டு விட்டது.**

**கார்த்திகை தீபம் ஏற்ற அரசு எந்தத் தடையும் விதிக்கவில்லை. பல்லாண்டுகளாக தீபம் ஏற்றப்படும் இடத்தை மாற்றிவிட்டு வேறு இடத்தில் ஏற்ற வேண்டும் என்று கேட்பது தான் பிரச்சினையாக உள்ளது.**

1996 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், “உச்சிப்பிள்ளையார் கோவில் தீபத்தூணில் தீபம் ஏற்றும் இடம் தான் பாரம்பர்யமானது” என்று சொல்லப்பட்டு உள்ளது. 2014 உயர்நீதிமன்ற அமர்விடம் கேட்ட ஆதாரங்கள் தராததால் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. 7.12.2017 ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பில் எங்கு தீபம் ஏற்ற வேண்டும் என்று சொல்லப்பட்டதோ அதன்படி தான் அரசு செயல்பட்டு வருகிறது. **‘தர்கா அருகில் உள்ள மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்பதற்கான ஆகம ஆதாரம் ஏதும் இல்லை. அமைதி மற்றும் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கத் தேவையில்லை’** என்று தீர்ப்பு வந்தது.

இப்போது வழங்கப்பட்ட தீர்ப்பில் கூட இவர்களது கலவர நோக்கத்துக்கு தடை விதித்துவிட்டார்கள் நீதிபதிகள். “கோயில் நிர்வாகம் மட்டுமே தீபம் ஏற்ற வேண்டும். பொதுமக்கள், அரசியல் கட்சியினரை அனுமதிக்கக் கூடாது.” என்று சொல்லி இருக்கிறார்கள் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரனும், கே.கே.ராமகிருஷ்ணனும். இப்படி அமைதியாக நடப்பதை இங்குள்ள கும்பல் விரும்பாது.

**தமிழ்நாட்டின் கோவில்கள் அமைதியாக இருக்கின்றன. லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி வணங்கி வருகிறார்கள். இந்த நான்கரை ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டின் அனைத்துக் கோவில்களும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. எந்தக் கோவில் திருவிழாக்களிலும் எந்தப் பிரச்சினையும் இல்லை. உண்மையான பக்தர்கள் விரும்பும் ஆட்சியாக இதனை முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தி வருகிறார்கள். இதில் தீயைப் போட்டு அமைதியைக் குலைக்க யார் நினைத்தாலும், அதனை தமிழ்நாட்டு மக்களே விரும்ப மாட்டார்கள்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2026) சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000/ ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், தா.மோ.அன்பரசன், அர.சக்கரபாணி, மா. சுப்பிரமணியன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், இ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் டாக்டர். கே.சு.பழனிசாமி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) மரு.மு.வீரப்பன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியாவில் ‘திராவிட மாடல்’ ஆட்சியை தான் பிற மாநிலங்களில் பின்பற்றி வருகின்றன!

# 2026 தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெறும்!

## விராலிமலை பொதுக்கூட்டத்தில் வைகோ பேச்சு!

புதுக்கோட்டை, ஜன. 9 –

சமூக நல்லிணக்கம் சகோதரத்துவத்தை வலியுறுத்தும் வகையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நடை பயணமாக திருச்சியில் இருந்து மதுரைக்குச் செல்ல விராலிமலை வழியாக வந்தார். அப்போது புதுக்கோட்டை மாவட்ட எல்லையான விராலிமலை ஒன்றியம் மேலப்பச்சகுடி பிரிவு சாலை அருகே ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் எஸ்.கே.கலியமூர்த்தி தலைமையில் யானை மற்றும் குதிரைகளுடன் கட்சியினர் வரவேற்றனர். தொடர்ந்து சமத்துவ நடை பயண பொதுக்கூட்டம் செக்போஸ்டில் நடந்தது.

கூட்டத்திற்குபுதுக்கோட்டை ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் எஸ்.கே.கலியமூர்த்தி தலைமை வகித்தார். தி.மு.க. மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் முன்னிலை வகித்தார்.

சமத்துவ நடை பயண பொதுக்கூட்டத்தில் வைகோ பேசியதாவது :–

வைணவ திருத்தலங்களில் கொள்ளை போன வைர வைடூரியங்களை மீட்டெடுக்க வேண்டும் என மறைந்த டாக்டர் கலைஞர் அவர்களின் ஆணைக்கினங்க 1986ம் ஆண்டு முதல் நடைபயணத்தை தொடங்கினேன், இதேபோல் தென்னக நதிகளை இணைக்க வேண்டும் எனவும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை நிர்மூலமாக்கும் வகையில் தூத்துக்குடியில் இருந்த ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி உள்ளிட்ட 10 நடை பயணத்தை மேற்கொண்டுள்ளேன்.

அதேபோல் தற்போது 11வதாக சமத்துவ நடை பயணத்தை கடந்த 2ம் தேதி திருச்சியில் தொடங்கினேன். இந்த நடை பயணத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்தி தொடங்கி வைத்தார். நடைபெற உள்ள 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான சமத்துவ முற்போக்கு கூட்டணி தனிப்பெரும் பான்மையுடன் வெற்றி பெறும் .

இந்துத்துவா சக்திகள் இந்து முஸ்லிம் கிறிஸ்தவர் என்று சகோதரர்களாக சக மனிதர்களாக ஒற்றுமையின் பூந்தோட்டமாக விளங்கி இருக்கக்கூடிய தமிழகத்தில் 1948 ல் ஜனவரியில் பிர்லா மாளிகை பிரார்த்தனை கூட்டத்தில் உலக உத்தமர் காந்தியடிகளை மார்பிலே தோட்டாக்களை செலுத்தி கொன்ற கொடியவன் நாகு ராம் விநாயக கோட்ஷே அவனுக்கு சிலை எழுப்ப வேண்டும் என ஒரு பகுதியிலே சிலை எழுப்பவும் போற்றி பாசுரங்கள் பாடவும் இந்த இந்துத்துவா சக்திகள் முனைந்துவிட்ட சூழலில் தான் பாட்டாளி மக்களுக்கு வாழ்வு கொடுத்துக் கொண்டிருந்த கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தில் அந்த காந்தியடிகளின் பெயரையே அகற்றியதற்கு காரணம் மதவறி, இந்துத்துவ வெறி இது நாட்டின் எதிர்காலத்தையே நாசமாக்கி விடும்.

### இந்துத்துவாவின் கொடிய பிரகடனம்!

2022 பிப்ரவரி மாதத்தில் இந்துத்துவ சக்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு மாநாடு நடத்தி ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்கள். இதில் இந்தியா என்ற பெயர் அகற்றப்பட்டு பாரதம் என பெயர் வைக்கப்படும். இனிமேல் இந்தியாவில் முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கு ஓட்டுரிமையும் குடியுரிமையும் கிடையாது. இனி இந்தியாவில் சமஸ்கிருதம் இந்தி மட்டும் தான் மொழிப் பட்டியலில் இடம்பெறும் என்ற கொடிய பிரகட னத்தை செய்தார்களே அதனுடைய நீட்ச்சியாத் தான் இப்போது தமிழகத்தில் எஃகு கோட்டையாக விளங்கக் கூடிய திராவிட இயக்கத்தை தமிழ்நாட்டில் இருந்து அகற்றி விடலாம் என்ற நோக்கத்தோடு ஒரு நாளைக்கு திருக்குறளையும், புறநானூற்று வரிகளையும், பாரதியார் வரிகளையும் ஹிந்தியில் எழுதி வைத்துக்கொண்டு வாசித்து தமிழ்நாட்டில் நுழைய முயற்சிக்கிறார்கள்.

### மனித நல்லிணக்க நடை பயணம்!

மனித நல்லிணக்கத்தோடு இருக்கின்ற தமிழ்நாட்டில் அந்த நிலையை நாசப்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய முயற்சிகளை துடைத்தெறிவதற்காகவே இந்த நடை பயணத்தை மேற்கொண்டு இருக்கிறேன். தற்போது இளைஞர்கள் மாணவர்கள் போதைக்கு அடிமையாகி மிருகத்தனமாக எண்ணங்கள் தோன்றியதால் பல்வேறு குற்ற சம்பவங்களில் ஈடுபட காரணமாகிறது. போதைப் பொருளுக்கு எதிரான சட்டங்களை நமது தமிழக முதல்வர் எதிர்காலத்தில் கொண்டு வருவார். இந்த போதைப் பழக்கத்தினால் இளைஞர்களுக்கு ஏற்படும் விளைவுகளை கருத்தில் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த நடை பயணத்தை மேற்கொண்டு வருகிறேன்.

இனி ஒரு பிறவி இருக்கும் பட்சத்தில் இந்த செந்தமிழ் நாட்டிலே நான் பிறக்க வேண்டும் என விரும்புகிறேன். பஞ்சாப் மாநிலம் ஒரு காலத்தில் விளையாட்டிற்கும் விவசாயத்திற்கும் முதலிடம் பெற்றது ஆனால் தற்போது போதைக்கு அடிமையாகி உள்ளது. இந்த நிலைமை நம் தமிழகத்திற்கும் வரக்கூடாது என்பதற்கும் போதை பழக்கத்திலிருந்து இளைய சமுதாயத்தை மீட்பதற்கும் தடுப்பதற்கும் நான் இந்த நடை பயணத்தை மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல் எனது கடைசி மூச்சு இருக்கும் வரை இந்த செந்தமிழகத்திற்காக தமிழ் மக்களுக்காகவும் தமிழகத்தின் வாழ்வாதாரங்களை பாதுகாப்பதற்காகவும் நான் இந்த நடை பயணத்தை மேற்கொண்டு இருக்கிறேன்.

இந்தியாவில் திராவிட மாடல் ஆட்சியை தான் பிற மாநிலங்களில் பின்பற்றி வருகின்றனர். எனவே வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும் என்றார்.



இக்கூட்டத்தில் ம.தி.மு.க. பொருளாளர் செந்திலதிபன், சி.பி.எம். மாநிலச் செயலாளர் சண்முகம், சி.பி.ஐ. தேசிய குழு உறுப்பினர் செல்வராஜ், மனித நேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. அப்துல் சமது, கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. ஈஸ்வரன், தந்தை பெரியார் திராவிட கழக பொதுச்செய லாளர் கோவை ராமகிருஷ்ணன், எஸ்.டி.பி.ஐ. மாநிலத் தலைவர் நெல்லை முபாரக், சின்னதுரை (கந்தர்வகோட்டை எம்.எல்.ஏ.), ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்கள் தி.மு.ராஜேந்திரன், டாக்டர் ரொகையா, திமுக மாநில நிர்வாகி பி.டி.அரசகுமார், தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், அ.இளங்குமரன், மு.பி.ம. சத்தியசீலன், கே.பி.ஐயப்பன், குளவாய்ப்பட்டி சி.சண்முகம் மற்றும் கை.பழனிச்சாமி, சொ.தமிழினியன், சிவா, ஐஸ் கணேசன், வள்ளிக்கண்ணன், ம.தி.மு.க. ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சியினர் பலரும் கலந்து கொண்டனர். முன்னதாக ம.தி.மு.க. விராலிமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் சவரிநாதன் வரவேற்றார்.

### அமித்ஷாவின் ஆணவத் திமிர் பேச்சு!

புதுக்கோட்டையில் மத்திய அமைச்சர் அமீத்ஷா தி.மு.க.வை உடைத்து விடுவேன் என்று கூறியதற்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கூட்டத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

75 ஆண்டுகள் வரலாற்றை கொண்ட கண்ணீரால் ரத்தத்தால் வியர்வையால் கட்டி எழுப்பப்பட்ட நாயரும் நடேசனாரும், தியாகராயரும் அடித்தளத்தில் அறிவு ஆசான் பெரியார் அண்ணா, கலைஞர் ஆகியோரால் கட்டி எழுப்பப்பட்ட எஃகு கோட்டையில் தியாகத்தால் மார்பிக்கப்பட்ட எஃகு கோட் டையில் ஒரு செங்கலை கூட அவர் தொட்டுப் பார்க்க முடியாது. அவர் தி.மு.க.வை உடைத்தெறிவேன் என ஆணவ திமிர் பேச்சிற்கு திராவிட இயக்கத்தின் சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

